1979 அக்டோபர் 31]

இணைப்பு XIV.

[631ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 287க்கான விடையைக் காண்க]

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் மேற்கொள்ளும் பணிகள்:—

சங்க உறுப்பினர்களிடமிருந்து குறுகிய, மத்திய, நீண்ட கால நிரந்தர வைப்புத் தொகைகள் மற்றும், ரெகரிங், சேமிப்பு, தினவைப்புகள் பெற்று, விவசாய காரியங்களுக்கு கடன் வழங்கி வருகிறது. நில அபிவிருத்தி காரியங்களுக்காக உறுப்பினர்களுக்கு மத்திய காலக் கடன்களும், குறுகிய கால பயிர்க்கடன்களும், நகை ஈட்டுக் கடன்களும், விசைத் தெளிப்பான் வாங்க, சாண எரிவாயு சாதனம் அமைக்க, கலப்பு உரம் கொள்முதல் செய்ய, வண்டிமாடு வாங்க கடன்களும் வழங்கி வருகிறது.

நேரடி உர விநியோகம் தவிர, 1961ம் ஆண்டு முதல் அரசு அனுமதி பெற்று, விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு கலப்பு உரங்களைத் தயார்செய்து விநியோகம் செய்து வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து பூச்சி மருந்துகளையும் விநியோகம் செய்து வருகிறது.

தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மற்றும் அரசு நிதி உதவியுடன் பூச்சிமருந்து தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்றை 1970ம் ஆண்டில் ஆரம்பித்து சுமார் 10 வகையான பூச்சிமருந்து களைத் தயார் செய்து தமிழகமெங்கும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. அரசாங்கத்திடமிருந்து கடனும் மானியமும் பெற்று பருத்தி அரவைத்தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகிறது. கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் ஆகியவை தயார் செய்ய தொழிற்சாலை ஒன்றினை அமைத்து விவசாயி களுக்குத் தேவையான கால்நடை, கோழித் தீவனங்களைத் தயார் செய்து விற்பனை செய்து வருகிறது.

தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மற்றும் அரசு நிதி உதவியுடன் விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்களை தயார் செய்யும் தொழிற்சாலை ஆரம்பித்து நடத்தி வருகிறது. 1970ம் ஆண்டில் 'கேர்' ஸ்தாபனம் நன்கொடையாக கொடுத்து ஐந்து டிரேக்டர்களுடன் மேலும் ஆறு டிரேக்டர்கள் கொள்முதல் செய்து அப்பகுதி விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் விவசாயப் பணிகளுக்கு உதவி வருகிறது. உறுப்பினர்களின் டிரேக்டர்களை பழுதுபார்த்தும் கொடுத்து வருகிறது.

பெட்ரோல், பங்க்கும் பழுதுபார்க்கும் நிலையமும் வைத்து பெட்ரோல், டீசல், ஆயில் முதலியவை விற்பனை செய்து வருகிறது. கோவை மாவட்டத்தில் ஒன்பது கூட்டுறவு விற்பனை

சங்கங்களுக்குத் தலைமை சங்கமாக இருந்து ரூ. 1·70 கோடி மதிப்புள்ள கோவை விதை உற்பத்தி திட்டத்தை அமல் நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு வீரிய வித்துக்களை விஞ்ஞான ரீதியில் உற்பத்தி செய்து தரமான வித்துக்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகிறது.

அரசு திட்டத்தின் கீழ் வெள்ளக்கினர், பன்னிமடை ஆகிய கிராமங்களில் கூட்டுறவு அங்காடிகளை ஆரம்பித்து நடத்தி வருகிறது. சிமெண்ட், மண்ணெண்ணெய், உணவுப் பொருட்கள் ஆகியவைகளையும் விநியோகம் செய்து வருகிறது.

இணைப்பு XV.

[48ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 37க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (இ) பிரிவு :

1975–76.

நகராட்சி, நகரியங்களின் பெயர். (1)	வருவாய். (2) ரூ.	நிலுவை. (3) ரூ.
1. அம்பத்தூர்	31,81,144·00	2,58,680·00
2. ஆவடி	34,12,728·00	13,21,547·00
3. குற்றாலம்	7,87,595·00	3,497·85
4. கத்திவாக்கம் ..	11,50,621·00	1,76,380·75
5. மேட்டூர்	15,15,160·16	3,613·00
6. கொடைக்கானல் ..	8,64,031·00	8,704·21
7. பவானிசாகர் ..	1,62,456·00	29,341·00
8. மாதவரம்	6,99,733·33	82,586·37

1976–77

1. அம்பத்தூர்	38,80,510·00	20,28,667·00
2. ஆவடி	25,67,500·00	16,73,532·00
3. குற்றாலம்	9,77,820·00	5,362·61
4. கத்திவாக்கம் ..	20,61,308·00	96,205·25
5. மேட்டூர்	17,66,219·88	3,795·38
6. கொடைக்கானல் ..	12,33,141·00	21,534·00
7. பவானிசாகர் ..	1,53,457·00	32,466·8